திரு. செ. சதாசிவம்: அந்த வெங்காய உற்பத்தியாளர்கள் மத்திய அரசை அணுகி கேட்டிருந்த நேரத்தில் அவர்கள் மாநில அரசைக் கேட்டோம், அவர்கள் தேவையில்லை என்ற முறையிலே கூறியிருப்பதாகக் கூறினார்கள். ஆகவே தயவு செய்து அமைச்சர் அவர்கள் அந்த ஏழை விவசாயிகளுடைய அக்கறையிலே நாட்டங் கொண்டு ஏற்றுமதியை விரிவுபடுத்துவதற்கான வழிவகைகளை பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே வெங்காயத்தினுடைய விலை கணிசமாக விவசாயிகளைப் பாதிக்கின்ற வகையில் குறைந்திருப்பதற்குக் காரணம் ஏற்கனவே இங்கே குறிப்பிலே எடுத்துச் சொல்லியதைப் போல, தமிழகத்திலே தேவையான வெங்காயம் உற்பத்தி இல்லாமல் வெளி மாநிலங்களில் இருந்து தேவையான அளவு வெங்காயம் வருவதற்குண்டான சூழ்நிலை இருக்கிறது. மேலும் விலை இறக்கத்திற்கு, இலங்கை போன்ற அந்நிய நாடுகளுக்கு வெங்காயம் ஏற்றுமதி செய்வது தடைசெய்யப்பட்டிருப்பதும் காரணம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல 1.20 காசுக்கு வெங்காயம் விற்கப்படுகிறது என்று குறிப்பிலே சொல்லப்பட வில்லை. சாதாரணமாக, வெங்காயம் அறுவடை நேரத்தில் 80 பைசா முதல் 1.20 வரை விற்கப்படும். ஆனால் இந்த முறை விலை குறைந்திருப்பதற்குக் காரணம் மாநில அரசாங்கங்களுடைய ஆலோசனையைக் கேட்டு மத்திய அரசாங்கம் இலங்கை போன்ற வெளிநாடுகளுக்கு வெங்காய ஏற்றுமதியைத் தடைசெய்திருப்பது தான் காரணம். அண்மையிலே மத்திய அரசு, மாநிலங்களின் ஆலோசனையின் பேரில், இலங்கை போன்ற நாடுகளுக்கு மீண்டும் வெங்காயம் ஏற்றுமதி செய்வதற்கு அனுமதி தந்திருக்கிறது. ஆகவே இந்த மாதம் 19-ம் தேதி வரை 1,000 டன் வெங்காயம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய இருக்கிற காரணத்தாலே, ஒருவேளை நியாயமான விலை விவசாயிகளுக்கு இனிமேல் கிடைக்கலாம் என்று அரசின் சார்பிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(ஊ) தஞ்சை மாவட்டத்தில் குறுவைப் பயிரை பூச்சி தாக்குவது.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, ''தஞ்சை மாவட்டத்தில் இந்த ஆண்டு குறுவைப் பயிரில் கடுமையாக பூச்சி தாக்கி சேதம் விளைவிப்பதை உடனடியாக தடுக்க வேண்டியது பற்றி'' அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை வேளாண்மைத் துறை மற்றும் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[1978 செப்டம்பர் 13

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பாண்டில் தஞ்சை மாவட்டத்தில் சுமார் 3.60 இலட்சம் ஏக்கராக்களில் குறுவை நெல் பயிராகி இருக்கிறது. புகையானும் கூட்டுப் புழுவும் ஓரிரு இடங்களில் நெற்பயிரைத் தாக்கியுள்ளது. இந்தத் தாக்குதல் குறைவான அளவிலேயே உள்ளது. தஞ்சை மாவட்டம் முழுவதிலுமே சுமார் 20,000 ஏக்கர் நெற்பயிர் இத்தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கும் எனலாம். வேளாண்மைத் துறையினர் இத்தாக்குதல் கண்டவுடனேயே தெளிப்பான்களையும், தூவுவான்களையும் கொண்டு சுமார் 19,000 ஏக்கராவில் பூச்சித் தாக்குதலுக்கு எதிர் நடவடிக்கை எடுக்க உதவி உள்ளனர். இது தவிர கீழ்க்கண்ட நடவடிக்கைகளும் தக்க தருணத்தில் எடுக்கப்பட்டன:—

1. பூச்சி முன்னறிவிப்பு (Pest Surveillance and Rowing Scheme) திட்டங்களின் உதவி கொண்டு பயிர் பாதுகாப்பு அலுவலர்கள் முறையாக ஆய்வு செய்து, வேளாண்மைத்துறை அலுவலருக்கும், விவசாயிகளுக்கும் 'புகையான்' நோய் தாக்குதல் பற்றி முன்னறிவிப்புச் செய்யப்பட்டது.

2. குறுவைப் பயிரில் தோன்றும் பூச்சிகள் பற்றி துண்டுப் பிரசுரங்கள் அச்சடித்து விவசாயிகளுக்கு விநியோகிக்கப் பட்டுள்ளது. இது தவிர வானொலி மற்றும் இதர சாதனங்கள் மூலமாக விவசாயிகளுக்குப் பூச்சி தாக்குதல் பற்றி முன்னெச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

3. புகையான் பற்றி சுவரொட்டிகள் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

4. குறுவைப் பயிருக்குத் தேவையான எல்லாவிதமான பூச்சி மருந்துகளும் அனைத்து விவசாயக் கிடங்குகளிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

5. தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு வாடகைக்கு அளிப்பதற்காக 1,200 தூவான்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

6. புகையானின் தீவிரத் தாக்குதலுக்கு இலக்கான பகுதிகளுக்கென மத்திய அரசின் நிதியுதவியுடன் கடந்த சில வருடங்களாகச் செயல்பட்டு வரும் திட்டத்தின் கீழ் தஞ்சை மாவட்டத்தில் சுமார் 6,300 ஏக்கர் பரப்பளவில் மொத்தமாக மருந்தடிக்கும் வேலை மேற்கொள்ளப்படும்.

7. கும்பகோணம் மாயூரம் கோட்டங்களில் சுமார் 100 ஏக்கர் குறுவை அறுவடை செய்யப்பட்டுள்ளது. மற்ற கோட்டங்களில் அறுவடைக்கு வந்த பரப்பு இதைவிடக் குறைவு. இந்த இரண்டு கோட்டங்களிலும் ஏக்கர் ஒன்றுக்கு சராசரி மகசூல் பினவருமாறு:—

	(கிலோவில்)
கும்பகோணம்	1,500 முதல் 2,000
மாயூரம்	1,700 முதல் 2,300

இதிலிருந்து பூச்சி தாக்குதலினால் மகசூல் பாதிக்கப்படவில்லை எனலாம்.

*திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் 3 இலட்சம் ஏக்கரில் பயிரிடப் பட்டுள்ள குறுவை நெல்லை பூச்சிகள் தாக்கியிருக்கின்றன. மருந்துகள் கிடங்கிலே வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். நோட்டீஸ்கள் அச்சடித்து ஒட்டப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். இதற்கு அடிக்கப்படுகின்ற மருந்துகள் தனியார் துறையிலே தயாரிக்கப்படுகின்றன. அந்த மருந்துகளைச் சாப்பிட்டு விட்டு பூச்சிகள் கொழுத்துப்போய், பயிர்களைத் தின்றுகொண்டிருக்கின்றன. எனவே அரசுத் துறையிலேயே உத்தரவாதமான மருந்துகளைத் தயாரிக்க அரசு முன் வருமா என்பதையும், தனியார் துறையிலே தயாரிக்கப்படுகின்ற மருந்துகளிலே வீரியம் இருக்கிறதா என்பதைப் பரிசீலிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 10-50]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இந்த ஆண்டிலே நடவு செய்த குறுவைப் பயிரில் ஏறத்தாழ 20,000 ஏக்கர் இது போன்று பூச்சித் தொல்லைக்கு உள்ளாகி இருக்கின்றன. அவைகளையெல்லாம் கட்டுப்படுத்துவதற்கு மத்திய அரசின் திட்டத்தின் கீழாக இன்று தஞ்சை மாவட்டத்தில் 6,300 ஏக்கரில் மருந்து தெளிக்கும் முறையை வேளாண்மைத்துறை ஏற்றுக்கொண்டு செயல்படுத்தி வருகிறது. மேலும் ஏதோ பழைய பூச்சி மருந்துகளை வைத்துக் கொண்டு அதைத் தெளிப்பதால் அங்கே புழுக்களும், பூச்சிகளும், அதைச் சாப்பிட்டுவிட்டு பெருத்து விடுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்து சரியல்ல. அதற்கு மாறாக நல்ல மருந்துகள் பூச்சிகள் சாகும் மருந்துகள்தான் வேளாண்மைத் துறை மூலம் கொடுக்கிறோம். புதிய மருந்துகள் நம்மிடத்தில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(எ) குமரி மாவட்டம் நெய்யாறு இடது கரை கால்வாயில் தண்ணீர் விடாமை.

திரு. அ. சுவாமிதாஸ்: தலைவரவர்களே, குமரி மாவட்டத்தில் நெய்யாறு இடதுகரை கால்வாயில் கேரள அரசு தண்ணீர் விடாததால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் பயிராகாமலும், பயிரானவை தீய்ந்து போகும் நிலைமை பற்றிய அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மை மற்றும் நீர்ப் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, நெய்யாறு பாசனத் திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்டபோது, வாய்க்காலின் வடிவமைப்பு, கேரளப்பகுதிக்கு விநாடிக்கு 450 கன அடியும், தமிழ்நாட்டிற்கு விநாடிக்கு 150 கன அடியும் நீர் வழங்குவதற்கு